DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

# MCOP. No.57/2020

Deposition of Witness : PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பொன்ராஜ் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா/ மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.01.2024.

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**ம.த.கு.வி.:**

கேள்வி : நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க சம்மன் வந்ததா என்றால்?

பதில் : இல்லை

கேள்வி : மனுதாரர்கள் அழைத்ததின் பேரில் சாட்சியம் சொல்ல வந்தீர்களா என்றால்?

பதில் : ஆம்

கேள்வி : விபத்தில் இறந்துபோன நபர் உங்களுடைய தாய் மாமா என்றால்?

பதில் : ஆம்

கேள்வி : விபத்து சமயத்தில் இறந்துபோன சுருளிராஜ்தான் மோட்டார் வாகன விதிகளை பின்பற்றாமல் அதாவது 10 மீட்டர் இடைவெளிவிட்டு முன் சென்ற லாரியை பின் தொடராமல் சென்றதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால்?

பதில் : இல்லை

கேள்வி : இறந்துபோன சுருளிராஜ் அவர்களின் கவனக்குறைவினால்தான் விபத்து ஏற்பட்டதா என்றால்?

பதில் : இல்லை

கேள்வி : டிப்பர் லாரியை அதன் ஓட்டுநர் விபத்து சமயத்தில் மெதுவாகவும் கவனமாகவும்தான் ஓட்டி வந்தார் என்றால்?

பதில் : இல்லை

கேள்வி : நீங்களும் உங்கள் தம்பியும் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது எப்படி முன் செல்லும் உங்களது மாமா வாகனம் எவ்வளவு வேகத்தில் போகிறார் மற்றும் முன் செல்லும் லாரி எவ்விதம் போகிறது மற்றும் அதற்குமுன் கார் எப்படி வருகிறது என்பதை எல்லாம் கவனிக்க வாய்ப்பு இல்லை என்றால்?

பதில் : சரியல்ல

கேள்வி : நீங்கள் உங்க வண்டியின் மீது மட்டும் தான் கவனம் வைத்து செயல்பட்டு இருக்க முடியும் என்றால்?

பதில் : சரியல்ல

கேள்வி : இறந்தவர் உங்களுடைய மாமா என்பதால் விபத்தை சரியாக பார்க்காமல் காவல் நிலையத்தில் பொய் புகார் கொடுத்துவிட்டு தற்சமயம் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்?

பதில் : சரியல்ல

கேள்வி : உங்களது சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால்?

பதில் : சரியல்ல

கேள்வி : உங்களது மாமா மோட்டார் வாகன விதிகளை பின்பற்றி Helmet அணிந்து சென்றிருந்தால் இறப்பை தவிர்த்திருக்கலாம் என்றால்?

பதில் : சரியல்ல

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு , சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு , அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் 08.01.2024 இன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN

Digitally signed by S GOPINATHAN
Date: 2024.01.10 18:21:52 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.

08.01.2024